# திருமலையில் தமிழரை 3-ம் இடத்திற்கு தள்ள அரசு தீவிர முயற்சி

(திருமலை)

திருமலை மாவட்டத்தில், சனத் தொகை—வின விகிதாசாரத்தில் தமிழரை மூன்றும் இடத்திற்குத் தள்ளும் முயற்சிகளை அரசு திட்டமிட்டுச் செயற்படுத்தி வருகிறது.

தமிழ்ப் பகுதியெங்கும் சிங்களக் குடியேற்றம் நடத்தியும், தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேசங்களிருந்து அவர்களை வெளியேற்றி அகதி முகாம்களுக்கு அனுப்புவதன் மூலமும் இவ்வாறான திட்டத்தைத் தீவிரமாக அரசு செயற்படுத்தி வருகிறது.

இதேவேளை, தமிழ் மக்களை மதம் மாற்றும் முயற்சியில் முஸ்லிம் அமைப்புகள் தீவிர

[4ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5.00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆடி 1 | இதழ் 156
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 16 — 07 — 1992

## இனப்பிரச்னை தீர்வு இணைப்பில்தான் தங்கியுள்ளது

(பாரிஸ்)

இலங்கை இனப்பிரச்னைக்குரிய தீர்வு வடக்கு கிழக்கு இணைப்பில் தான் தங்கியுள்ளது, என்பதை இலங்கை அரசு மறந்து விடக்கூடாதென பாரிஸிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இனப்பிரச்னைக்கு உறுதியான தீர்வு காணும் விவகாரத்தை ஜனாதிபதி அரசியல் லாபமின்றி தீர்க்கதரி

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ பெரும் தாக்குதல் முஸ்தீபு

# முல்லைத்தீவில் படை குவிப்பு கப்பல் மூலம் தரையிறக்கம்

(யாழ்ப்பாணம்)

**முல்லைத்தீவுப் பகுதியில் பாரிய யுத்தக் கப்பல்கள் மூலம் பெருமளவு படையினர் தரையிறக்கப்பட்டு இப்பகுதியில் குவிக்கப்பட்டு வருவதாகவும், கடற்பகுதியில் பாரிய கப்பல்களும், பீரங்கிப் படகுகள் பலவும் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் சில பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு அமுல்டடுத்தப்பட்டு படைகள் குவிக்கப்பட்டு வருவதன் மூலம் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றிற்கு படையினர் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். குடா மீதான முற்றுகையை தீவிரப்படுத்தும் ஒரு இராணுவ நடவடிக்கையாகவே இம்முறையும் அரசபடைகள் தமது தாக்குதல்களை மேற்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவு மேற்குப் பகுதியில் அடுத்த படை நடவடிக்கை இடம்பெறுமெனக் கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்ததும் குறிப்பிடத்தக்கது.

[சி-56]

## மண்டைதீவிலிருந்து பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கடற்பரப்பில் நிலைகொண்டுள்ள பீரங்கிப் படகிலிருந்து நேற்று பிற்பகல் 2-30 மணியளவில் பலத்த பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

யாழ். நகரில் கரையோரம் பகுதிகளை நோக்கி நடாத்தப்

[4-ம் பக்கம் பார்க்க]

## முல்லை, கிளிநொச்சியிலிருந்து பெருமளவு மக்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்துப் பாரிய அளவில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சத்தினால் மக்கள் அகப்பட்ட பொருள்களை எடுத்துக்கொண்டு ஆலயங்கள், பாடசாலைகளை நோக்கிச் சென்றவண்ணம் இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பெரும் தாக்குதல்கள் நிகழக்கூடுமென அஞ்சிய நிலையில் கால்நடைகள், பொருட்கள். வீடுவாசல்களை விட்டுவிட்டு மக்கள் பெரும் அல்லற்பட்ட நிலையில் இடம்பெயர்ந்து பிற இடங்களை நோக்கிச் செல்கின்றனர்.

புதுக்குடியிருப்புப் பகுதியிலிருந்தும் பெரும்தொகையான மக்கள் இராணுவ தாக்குதல் அறிவிப்பையடுத்து அப்

(4ம் பக்கம் பார்க்க)

## 3 தமிழ்ப் பெண்கள் முஸ்லிம்களால் கடத்தல்

(திருகோணமலை)

திருமலை தம்பலகாமம் சிவன்கோவிலடி அகதி முகாமிலிருந்து மூன்று தமிழ் பெண்கள் நேற்று முன்தினம் முஸ்லிம் கும்பல் ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

[4-ம் பக்கம் பார்க்க]

## யாழ். கடலேரியில் மிதந்து வந்த சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கடல் நீரேரிப் பகுதியிலிருந்து துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் மணியந்தோட்ட கடற்பரப்பில் மிதந்துவந்த

[4ம் பக்கம் பார்க்க]

## சிறில் ரணதுங்கவுக்கு அரச அதிபர் அவசர செய்தி

(யாழ்ப்பாணம்)

தமது கொழும்பு விஜயத்தை தடை செய்ததற்கு காரணம் என்ன என்பதை உடன் அறிவிக்கும்படி யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவுக்கு அவசர செய்தியொன்றை நேற்று அனுப்பியுள்ளார்.

குமணக் கப்பலில் நேற்று

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டுநகரில் பஸ் மீது சூடு; 19 பயணிகள் பலி; ஐவர் காயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு-கல்முனை வீதியில் பஸ்சில் பயணம் செய்து கொண்டிருந்த பயணிகள் மீது இனம் தெரியாதோர் நேற்று நடாத்திய துப்பாககிப் பிரயோகத்தில் 19 பயணிகள் கொல்லப்பட்டும் 10 ஐவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மட்டக்களப்பு-கல்முனை வீதியில் உள்ள கிரான்குளம் என்ற பகுதியில் சென்றுகொண்டிருந்த பஸ்ஸை வழிமறித்த ஆயுதம் தாங்கிய 10 பேர் மினி

[4-ம் பக்கம் பார்க்க]

## விடுதலைப்புலிகள் தொடர்பாக இந்திய நிலைப்பாட்டில் மாற்றமில்லை

(புதுடில்லி)

விடுதலைப்புலிகள் தொடர்பாக இந்திய அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லையென உள்துறைஅமைச்சர் திரு. எஸ். பி. சவான் லோக் சபாவில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ராஜீவ்காந்தி படுகொலை தொடர்பாக விடுதலைப்புலிகள் தலைவர் திரு வே. பிரபாகரனை இந்தியாவுக்கு கொண்டுவந்து விசாரணை செய்யும் இந்திய அரசின் கொள்கையில் எதுவித மாற்றமும் கிடையாது.

இவ்விடயம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் இந்திய மத்திய அரசுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கும் என தாம் நம்புவதாகவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

(க)

புலிகள் விவகாரம்

## இந்தியாவின் கொள்கை முன்னுக்குப் பின் முரணானதாம்

(புதுடில்லி)

விடுதலைப்புலிகள் விடயம் தொடர்பாக இந்திய மத்திய அரசு கடைப்பிடித்துவரும் கொள்கை முன்னுக்குப்பின் முரணாக உள்ளதாகவும் இருமனப்போக்கு உடையதாகவும் காணப்படுவதாக பாரதிய ஜனதாக்கட்சி உறுப்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### தேவை

ஆஸ்பத்திரிவீதியில் ஆரம்பமாகவிருக்கும் வைத்திய நிலையத்துக்கு R. M. P. அல்லது A. M. P, M. L. Tயும் தாதியும் தேவை. நா. தனபாலசிங்கம், 51, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி-6540)

### இடமாற்றம்

இதுவரை 15 வருட காலமாக யாழ். பஸ் நிலையம் முன்பாக இயங்கிவந்த டில்கா வாச் வேக்ஸ் எனும் ஸ்தாபனம் தற்சமயம் 284, ஸ்ரான்லி வீதியில் (வானவில் அருகாமை) இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். (சி-6533)

### பாவித்த மணிக்கூடுகள்

பாவித்த தரமான மணிக்கூடுகள் வாங்கப்படும்—விற்கப்படும். பழைய மணிக்கூடுகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். உங்கள் கடிகாரங்கள், றேடியோ, ரீ வி டெக் ஆகியன உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் அருகாமை) யாழ்ப்பாணம். (சி-6534)

### A/L 93/94
### பௌதிகவியல்

பிரத்தியேக தனிப்பட்ட முறையில் தூயகணிதம், பிரயோக கணிதம் மிகச் சிறந்த முறையில் பல வருடம் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினுல் மிகச் சிறப்பாக கற்பிக்கப்படும். R பாலசுப்பிரமணியம் B.Sc Cey Dip in Ed. 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (சி-6542)

### விற்பனைக்கு

அலுமாரி, சோக்கேஸ், வாங்குகள், இரண்டு லாச்சியுடன் மேசை, மேசை, இரும்புக் கம்பியில் செய்த கேற்வகைகள், நிலைக்கதவுகள், யன்னல் கதவுகள், பனைமரங்கள், பலகைகள், ரீப்பைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். (சி-6543)

அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'தொண்டமானின் சமரச முயற்சியும் சிங்களப் பேரினவாதமும்', 'கஸ்தூரியின் ஆக்கங்கள்' (கவிதைகள் சிறுகதைகள்) ஆகிய நூல்கள், வேகமாக விற்பனையாகின்றன. எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (ஏ-2298)

வெளிவந்துவிட்டது

**வரலாறு**
**ஆண்டு 11 O/L**

மாதிரி வினா-விடை

3 வருட O/L,
அடுத்த O/L பரீட்சை
வரலாறு வினா-விடை
கொண்டது.

ஆக்கம்:
நா. மயில்வாகனம்
விலை ரூபா 28/-
புத்தகசாலைகளில்
பெறலாம்.

(சி-6535)

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**


அகதிகள்

## குடியிருப்பில் குடிசை தீக்கிரை

(புங்குடுதீவு)

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் கடந்த 13ம் திகதி நள்ளிரவு குடிசையொன்று தீப்பற்றி எரிந்தது. தவறுதலாக ஏற்பட்ட தீயினுல் குடிசை முற்றாக எரிந்ததுடன் அதற்குள் இருந்த பாடப் புத்தகங்கள், பிடவைகள் என்பன தீக்கிரையாயின. ஊர் காவற்றுறையைச் சேர்ந்த ஞா. ஜெயம் என்பவர் குடியிருந்த, 232ம் இலக்க குடிசையே தீப்பற்றி எரிந்ததாகும். (101)

வடமராட்சியில்

## உப்பு விளைச்சல்

(யாழ்ப்பாணம்)

வல்லை வெளிக்கால்வாயில் உப்பு விளைந்துள்ளதால் பொது மக்கள் போட்டி போட்டு அள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.

வருடாவருடம் கோடை காலத்தில் வல்லை, கரணவாய் மண்டான் போன்ற இடங்களில் இயற்கையமைப்பில் விளைந்து வரும்உப்புஇம்முறையும் விளைந்துள்ளது.

தற்போது வல்லை வெளி சிழக்குப்பகுதியில் ஆரம்பகட்டத்தில் விளைந்துள்ள உப்பை பொது மக்கள் போட்டி போட்டுக் கொண்டு சேகரிக்கத் தொடங்கியுள்ளார்கள் (51)

## கைப்பணி பொருட்காட்சி

(கொக்குவில்)

நல்லூர் மாதர் அபிவிருத்தி நிலைய, கிராம அபிவிருத்தி திணைக்கள தையல், பனையியல் கைப்பணிப்பொருட்காட்சி ஒன்று கொக்குவில் மேற்கு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் அண்மையில் நல்லூர் பிரிவுச்செயலாளர் திரு. ஆ. மகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக மாவட்டபிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் கலந்து கொண்டார்.

## பென்சன் வவுச்சர்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி வரைவந்துள்ள யூலை மாதத்துப் பென்சன் வவுச்சர்களை யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வருவதற்கான முயற்சியில் யாழ். அரசாங்க அதிபர் ஈடுபட்டுள்ளார்.

## சத்துணவு திட்டம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி ஐயனர் கோயிலடி அகதி முகாமில் அறவழிப் போராட்க்குழுவின் ஏற்பாட்டில்சத்துணவுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் உதவியுடன் இம்முகாம்களிலுள்ள 500 பிள்ளைகளுக்கு இச்சத்துணவுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருக்கிறது.

## சேரன் இல்லம் முதலிடம்

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை பால சுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக மருதனர் மடம் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இரத்தினராசா கலந்துகொண்டார்.

பாடசாலை அதிபர் திரு. க. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் சேரன் இல்லம் 1ம் இடத்தையும் சோழன், பாண்டியன் முறையே 2ம் 3ம் இடங்களையும் பெற்றுக்கொண்டன. (71)

விடுதலைப்புலிகளால் 10 பேர் விடுவிப்பு

# காட்டிக்கொடுப்பவர்களை இனங்கண்டு தெரிவியுங்கள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா இராணுவம். எம்மண்ணை ஆக்கிரமிப்பதுடன் எமது மக்களைக் கொன்று குவித்து அவர்களின் சொத்துக்களையும், உடைமைகளையும் சூறையாடி வருகின்றது. இதுபோன்ற நெருக்கடியான காலகட்டத்தில் எதிரியுடன் சேர்ந்து எமது போராட்டத்தைக் காட்டிக்கொடுக்க முனைந்து வருபவர்களை பொதுமக்களாகிய நீங்கள் இனங்கண்டு எமக்குத் தெரிவியுங்கள். இது உங்களது முக்கிய கடமை.

பல்வேறு காரணங்களுக்காக விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாமில் வைக்கப்பட்ட பத்துப் பேரை அவர்களின் பெற்றேரிடம் ஒப்படைக்கும் போது கோண்டாவில் தலைமைச்செயலகத்தில்நேற்று பத்திரிகையாளர் முன்னிலையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் யாழ்.மாவட்ட அரசியல் நிர்வாக உதவிப் பொறுப்பாளர் திரு. தங்கன் மேற்கண்டவாறு கூறினர்.

திரு தங்கன் மேலும் கூறியதாவது:

எதிரிகளின் சூழ்ச்சிவலைகளில் தெரிந்தும் தெரியாமலும் சிக்குண்ட இந்த பத்துபேரும் கடந்த ஒன்றறை வருடங்களாக எமது நன்னடத்தை தடுப்பு முகாம்களிலிருந்து இந்த மண்ணின் மகிமையையும் எதிரிகளின் துரோகச்செயல்களையும் நன்கு தெரிந்து கொண்டது மட்டுமின்றி தாம் சுயமாகசெய்து வந்ததொழில்களையும் எமது தடுப்பு முகாமில் இருந்து சிறப்பாகச் செய்துகொள்ளவும் தெரிந்து கொண்டுள்ளார்கள்.

இவர்கள் வருங்காலத்தில் தமது குடும்பத்தாருடன் இணைந்து சிறந்த வாழ்க்கையை நடாத்தும் விதமாக நாம் இவர்களை தற்போது பக்குவப்படுத்தி சமுதாயத்துடன் இணைந்து வாழ்க்கையை நடாத்தும்படி வெளியே அனுப்புகின்றோம்.

இவர்களைப் பொறுப்பேற்க வந்திருக்கும் தாய், தந்தையர், மனைவிமார், சகோதரர்கள், ஆகிய நீங்கள் இவர்கள் மீண்டும் தப்பான வழிகளில் நடக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டியது உங்களது கடமை என்பதை மறந்துவிட வேண்டாம்.

**- தங்கன்.**

இதே போன்று எமது தடுப்பு முகாம்களில் இருந்து வெளியேறிய சிலர் மீண்டும் எதிரிகளுடன் சேர்ந்து தவருன வழிகளில் நடக்க முனைந்து வருகின்றுர்கள் இப்படியாகச் செயல்பட்ட பாலசுரேஷ் என்பவரை நாம் அண்மையில் மீண்டும் கைது செய்துள்ளோம் என்று கூறினர். (வி)

## இராசி பலன்

16-07-1992

வியாழக்கிழமை

(தமிழுக்கு ஆனி 01)

துதியை பி. இ. 4-21வரை. திருவோணம் பி. இ. 1-45 வரை. சித்தயோகம். இராகு காலம் பகல் 1-30 முதல் 3-00 வரை. சுபநேரம் காலை 7-30 முதல் 9-00 வரை.

மேடம்: மன விசுவாசம், பணப்புழக்கம், குடும்ப பரிசம்.

இடபம்: வரட்டுப் பிடிவாதம், ஆணவம், வீண் செலவு.

மிதுனம்: சஞ்சலமான மனப்போக்கு. குதர்க்க வாதம். வெகுளித்தனம்.

கடகம்: தொழில் மகிழ்ச்சி, ஆன்மீக சிந்தனை, பயணம்.

சிங்கம்: கடும் உழைப்பு, அதிக வருவாய், குடும்ப சிறப்பு,

கன்னி: ஒதுங்கிப்போதல், கண்வலி. தியாக சிந்தை.

துலாம்: துணிகர முயற்சி, தொழில் சிக்கல், பணமுடை,

விருச்சிகம்: நண்பருதவி, தொழில் லாபம், காரியசித்தி.

தனுசு: வீண் சந்தேகம், தேவையற்ற வாதம், மனச் சுமை.

மகரம்: புதிய ஸ்தானம், தான தர்மம், இனியகனவு,

கும்பம்: வேண்டாத கவலை' வாக்குப்பகை, அலைச்சல்.

மீனம்: சுவாமி தரிசனம், கல்வியால் சிறப்பு, வெகுமதி.

— ஜோஸ்யர்

# நியமன கடிதங்கள் வழங்க ஏற்பாடு

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் உபஅதிபர் பகுதித்தலைவர்களாகக் கடமையாற்றுவோர் அனைவருக்கும் நியமனக் கடிதங்கள் வழங்க யாழ். கல்வித் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இப்பதவிகளை வகிப்போரது பெயர், தராதரம், சேவைக் காலம்பிறந்த திகதி முதலான முக்கிய விபரங்களைக்குறிப்பிட்டு சிபார்சு செய்து கோட்டக்கல்வி பிரதிக்கல்விப்பணிப்பாளருக்கூடாகத் தமக்கு அனுப்பிவைக்குமாறு யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் சகல அதிபர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (136)

## மெய்வல்லுனர் போட்டி

(உடுவில்)

உடுவில் ஹேரலிரேசறிரேு. க. த. க. பாடசாலை மெய்வல்லுனர் போட்டிகள் நாளை 17ம் திகதி பிற்பகல் உடுவில்புனிதசெபமாலைமாதா ஆலய முன்றலில் அதிபர் ச. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (109)


நீர் எங்கள் தனிப்பெரும் வளம்.
நீரைப் பாதுகாக்க,
மழை நீரைத் தேக்குவோம்.
குளங்கள்,
வாய்க்கால்களைப்
புனரமைத்து.
நீர் வளத்தைப் பேணுவதற்கு,
முனைப்புடன் செயற்படுவோம்.

இன்று காலை 8-30 மணிக்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சீலம்பாய் குளம் புனரமைப்புடன் இவ்வருட குளப்புனரைப்பு வேலைகள் ஆரம்பமாகின்றன.

"ஒவ்வொரு துளி நீரையும்
பயன்படுத்துவோம்"

உட்கட்டுமானப் பிரிவு.

**தமிழீழ ஆய்வு நிறுவனம்**

தமிழீழ விடுதலைப் புலிகள்.

(ஏ 2300)

**இலங்கை**
**செஞ்சிலுவைச் சங்கம்**
**யாழ்.கிளைத் தலைமையகம்**

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கமும் தேசிய தொழில் பயிற்றுநர் சபையும் இணைந்து சுருக்கெழுத்து, உதவித்தாதியர், எழுதுவினைஞர், வாழை நார்த்தொழில், தெங்கு பனம்பொருளுற்பத்தி, கத்தாளை நார்ப்பொருளுற்பத்தி பிரம்புப்பொருள் உற்பத்தி, பாய்நெய்தல், தையல், தோற்பொருளுற்பத்தி, நீர்இறைக்கும் இயந்திரத் திருத்துநர், மிதிவண்டி திருத்துநர், தச்சுத்தொழில், தச்சுத்தொழில், மட்பாண்டத்தொழில், இரும்புத்தொழில், கைத்தறித் தொழில், போன்ற துறைகளில் பயிற்சி நெறிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளன. தெரியப்படும் பயிலுனர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் ரூபா 450/- வழங்கப்படும். இத்துறையில் பயிலவிரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுப் பணிமனையில் பெற்று பூர்த்திசெய்து, பிரிவுப் பணிமனைகளூடாக 19-07-1992க்கு முன் யாழ். கிளைத் தலைமையகத்திற்குக் கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
15-7-92

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்.
(எ-2299)

# லண்டனில் தமிழ் சிறுவனுக்கு கௌரவ ஆசிரியர் விருது

[லண்டன்]

லண்டனிலிருந்து வெளியாகுக் ''சன்'' என்ற ஆங்கில தினசரிப் பத்திரிகை 13 வயதான கணேஷ் சிற்றம்பலத்திற்கு கௌவர ஆசியர் பதவி வழங்கி கௌரவித்துள்ளது.

இவர் தூய கணிதத்தில் சித்தியடைந்து கல்வி உலகை பெரும் வியப்பில் ஆழ்த்தி, பிரிட்டனில் மிகவும் இளைய வயதில் பட்டதாரி பயிற்சியையும் முடித்துள்ளார்.

இவரது கல்வியின் ஆர்வத்தை கௌரவிக்கும் முகமாகவே 'சன்' பத்திரிகையை வெளியிடும் ''நியூஸ் இன்ரநாஷனல்'' நிறுவனம் இவருக்கு ஒரு நாள் பதவி வழங்கிக் கௌரவித்துள்ளது.

'சன்' பத்திரிகையின் தினசரி விற்பனை 35 லட்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

(கே)

# தனிச் சிங்களத்தில் ஒய்வூதிய சுற்றறிக்கை

(சித்தன்கேணி)

ஒய்வூதியத் திணைக்களத்தில் இருந்து ஒய்வூதியம் வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும் தனிச் சிங்களத்தில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நிர்வாக பரவலாக்கல் ரீதியாக பிரதேச செயலகங்கள் மூலம் 1993 ஜனவரி 1ம் திகதியிலிருந்து இளைப்பாற்றுச்சம்பளம் வழங்குவது சம்பந்தமான சுற்றறிக்கை ஒய்வூதியத் திணைக்களத்தில் இருந்து தனிச் சிங்களத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த ஒய்வூதிய திணைக்கள சுற்றறிக்கை 6/92 இலக்கமிடப்பட்டு 1992-06-09 திகதியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் என்னவென்று தெரியாமல் உத்தியோகத்தர்கள் திகைப்படைந்துள்ளனர். [137]

# 'நெருப்பு மழை' கவிதைத்தொகுதிவெளியீடு

[யாழ்ப்பாணம்]

கவிஞர் மு.வே.யோ.வாஞ்சிநாதனின் 'நெருப்புமழை' என்னும் கவிதைத் தொகுதி வெளியீட்டுவிழா இம்மாதம் 21-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தளபதி செல்வராசா மங்களவிளக்கேற்றி வைக்கின்றார். தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் இளங்குமரன் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

'நிதர்சன'ப் பொறுப்பாளர் பரதன் முதற்பிரதியைப் பெறுவர். ஆய்வுரைகள் இ. முருகையன், காரை சுந்தரம்பிள்ளை ஆகியோர் நிகழ்த்த சிற்பி, புதுவை இரத்தினதுரை ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றவிருக்கின்றார்கள்.

சின்னமணி குழுவினரின் 'போர்முனையில் நெருப்பு மழை' என்ற வில்லிசை நிகழ்ச்சியும் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறவுள்ளது. [சு]

# பீரங்கி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடற்பிராந்தியத்திலிருந்து கடற்படையினர் நேற்றுமுன்னம் கரையோர பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

பீரங்கிக் குண்டுகள் கரையோரப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. சுமார் 10 நிமிடம் வரையில் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. (66)

# 1 லட்சம் பற்றறி மீட்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்குக் கடத்திச் செல்லவென இரு லொறிகளிலிருந்த ஒரு லட்சம் ரோச் பற்றறிகளையும், 5 ஆயிரம் கற்பூரப்பைக்கற்றுகளையும் முகத்துவாரப் பொலிசார் நேற்று முன்தினம் கைப்பற்றினர்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த 3 இளைஞர்கள் இது தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர். இருலொறிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. (கே)

# உத்தரப்பிரதேச மாநில அரசுக்கு மத்திய அரசு எச்சரிக்கை

(புதுடில்லி)

உத்தரப் பிரதேச அயோத்தியிலுள்ள 16-ம் நூற்றாண்டைச் சேர்ந்த புராதன பள்ளிவாசலைப் பாதுகாக்க மாநில அரசு தவறினால் அது பதவி நீக்கம் செய்யப்படலாமென மத்திய அரசு எச்சரிக்கை செய்துள்ளது.

உத்தரப் புரதேச மாநில அரசாங்கம் எதிர்க்கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ளது.

பள்ளிவாசலைச் சுற்றி மேலதிக படைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் இந்துமத தீவிரவாதிகள் இந்துக் கோவிலொன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபடுவதையிட்டே மத்திய அரசு இந்தக் கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளது. (கே)

# சர்வதேச சிறுவர் ஓவியப்போட்டி

(வட்டுக்கோட்டை)

1992 டிசம்பர் மாதம் ஜப்பானில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்ட இருவருடங்களுக்கு ஒருமுறை நடக்கும் 7வது கனகாவா சர்வதேச சிறுவர் ஓவியங்கள் போட்டிக்கு ஓவியங்களைச் சமர்ப்பிக்கும்படி 4 முதல் 15 வயது வரையுள்ள பாடசாலை மாணவ மாணவிகளுக்கு ஸ்ரீலங்கா ஐக்கிய நாடுகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

உலக மக்களின் பல் வகைப்பட்ட வாழ்க்கை முறைகளையும் கலாசரம் முதலானவற்றையும் புரிந்துகொள்ளக் கூடியதாக சிறுவர் சிறுமியரின் வடிமைப்பு அமைவது இந்தப் போட்டியின் முக்கிய நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

போட்டியில் சமர்ப்பிக்கப்படும் சித்திரங்கள் வேறொருவரின் உதவியின்றி போட்டியாளரினாலேயே வரையப்பட்டவையென பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்படவேண்டும். சகல சித்திரங்களும் 55x55 செ.மீ. [22x22 அங்] அளவுள்ள தாளிலேயே வரையப்பட்டிருக்க வேண்டும்.

சித்திரங்கள் அனைத்தும் 1992 ஆகஸ்ட் 25ம் திகதிக்கு முன் தமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா ஐக்கிய நாடுகள் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். [179]

# சைக்கிள் திருட்டு

(பளை]

கொடிகாமத்திலுள்ள சந்தையில் மரக்கறி வாங்குவதற்காக சைக்கிளை நிறுத்திவிட்டுச் சென்றவரின் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இரத்தினம் என்பவரின் சைக்கிளே திருடப்பட்டதாகும். இது தொடர்பாக விடுதலைப்புலிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (156)

# ரஷ்யாவில் விமான விபத்தில் 39 பேர் பலி

(மொஸ்கோ)

ரஷ்யாவில் அஸர்பைஜான் பகுதியில் ராணுவத்தினரின் குடும்பத்தினரை ஏற்றிவந்த ஜெட் விமானம் நொருங்கி விழுந்ததில் 39 பேர் பலியாகினர்.

குழப்பமும் கொந்தளிப்புமாக இருக்கும் இப்பகுதியில் ரஷ்ய சிப்பாய்கள் பணியாற்றுகிறார்கள்.

இவர்களின் குடும்பத்தினரை பாதுகாப்பான இடங்களுக்கு ஏற்றிவந்த ஜெட்பயணி விமானமே விபத்துக்குள்ளாகியது. [கே]

# இன்று

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கோண்டாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலய பூங்காவன உற்சவம் இன்று நடைபெறவுள்ளது.

காலை சங்காபிஷேகமும், மாலை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும், விசேட நிகழ்ச்சிகளாக விசேட மேளக்கச்சேரிகளும் திரு. பொன். சுந்தரலிங்கத்தின் இன்னிசைச் கச்சேரியும், திரு. இ. ஜெயராஜ் தலைமையில் அகில இலங்கை கம்பன் கழகத்தின் 'வழக்காடு மன்றமும்' இடம்பெறும்.

# கொள்ளைமுயற்சியில்ஈடுபட்ட இராணுவத்தினர் கைது

(மஸ்கெலியா)

சாமிமலை நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கொள்ளை முயற்சி தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டு மஸ்கெலிய பொலிஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் இராணுவத்தினராகும். இந்த இரு இராணுவத்தினரும் கடந்த ஒரு மாதமாக கடமைக்குச் செல்லாதிருந்தனர் என்று தெரிவிக்மப்பட்டுள்ளது. (கே)

# பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரியர் இடமாற்றங்களை நினைத்தபடி செய்யக்கூடாது

(வட்டுக்கோட்டை)

யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுமதியின்றி கோட்டங்களிலுள்ள பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் தாம் நினைத்தபடி இனிமேல் ஆசிரிய இடமாற்றங்கள் செய்யக்கூடாது.

பண்டத்தரிப்புக் கோட்டத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிப் பதவியுயர்வு பெற்று யாழ். கல்வித் திணைக்களத்திற்குச் சென்ற திரு. ப. சண்முகராஜாவுக்கு பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட கொத்தணி அதிபர்கள், அதிபர்கள் நடத்திய பிரியாவிடை வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ். வி. மகேசவேல் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

திரு. சுந்தரலிங்கம் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:

அதிபர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பணத்தில் இருநூறு ரூபாவுக்கு மேல் கையிருப்பில் வைத்திருக்கக் கூடாது. தேவை ஏற்படும் போது திணைக்கள அனுமதியைப் பெற்று வங்கியிலிருந்து எடுத்துச் செலவு செய்யலாம்.

ஒவ்வொரு பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் திணைக்களத்திலுள்ள சுயவிபரக் கோவைகள் போன்று வீடுகளிலும் தயாரித்து வைத்திருத்தல் வேண்டும். வீட்டில் வைத்திருக்கும் சுய விபரக் கோவையில் திணைக்களக் கோவையிலுள்ள பிரதானமான கடிதங்கள் போட்டோ பிரதி செய்து இணைத்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் ஒய்வூதியத்தை இலகுவாக, விரைவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இடம் பெயர்ந்த மாணவர்களிடமிருந்து எந்தவிதமான பணமும் கட்டாயப்படுத்திப் பெற்றுக்கொள்ளக்கூடாது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட அதிபர் சங்கத் தலைவர் சு. செல்லத்துரை வரவேற்புரை நிகழ்த்தினார். [139]

# பிரதேச செயலகம் சுற்றுலா காரியாலயம்

[பருத்தித்துறை]

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் சுற்றுலாகாரியாலயம் ஒன்று பிரதி செவ்வாய்க்கிழமைகள்தோறும் வல்வெட்டித்துறையில் இயங்கும்.

இவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாணசபையின் யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் பருத்தித்துறை பிரதேச செயலகஇடமாற்றத் திறப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்கு பருத்தித்துறை பிரதேச செயலாளர் திரு. சி. முருகேசபிள்ளை தலைமை தாங்கினார்.

# 14 பேரின் காவல் நீடிப்பு

(சென்னை)

பாம்பன் பாலத்தையும் ராமேஸ்வரம்கோபுரத்தையும் தகர்க்க முயன்றதாக சென்ற ஆண்டு குற்றஞ்சாட்டப்பட்டிருந்த 14 பேரின் காவல் காலம் இம்மாதம் 28ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருப்போாகளுக்கான குற்றப்பத்திரிகை நகலும் சம்பந்தப்பட்ட இதர ஆவணங்களின் நகல்களும் வழங்கப்பட்டுள்ளன. (கே)

# அன்பளிப்பு

[வட்டுக்கோட்டை]

சங்கானை பொது நூலக வாசகர் வட்டத்திற்கு சங்கானையைச் சேர்ந்த கே. எம். நடராஜா என்பவர் சுமார் ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார். [139]

# மண்ணெண்ணை திருட்டு

(அரியாலை

யாழ். தாராக்குளம் வீடமைப்புத்திட்டத்திலுள்ள வீடொன்றின் முன்பாக கடந்த 12ம் திகதி நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளிலிருந்து ரியூப் மூலம் 2 லீற்றர் மண்ணெண்ணை திருடப்பட்டுள்ளது, (59)

# தங்க நகைகள் திருட்டு

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை துறட்டிப்பனை அம்பாள் ஆலய வருடாந்த ரதோற்சவம் கடந்த திங்கள்கிழமை நடைபெற்றபோது பெண்மணியொருவரின் 10 தங்கப்பவுண் நிறையுள்ள தாலிக்கொடியும் குழந்தையொன்றின் 1சோடி வளையலும் திருட்டுபோயுள்ளன. (137)

# மாதகல், பலாலியிலிருந்து பீரங்கி, ஷெல் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

மாதகல் கடற்பரப்பிலிருந்து நேற்று பிற்பகல் கரையோரப்பகுதியை நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

பலாலி இராணுவமுகாமிலிருந்து படையினர் தெல்லிப்பளை பகுதிகளிலுள்ள குடிமனைகளை நோக்கி ஷெல்தாக்குதல்களையும் நேற்றிரவு மேற்கொண்டனர்.

இரவு 8-15 மணியளவில் மண்டைதீவு முகாமிலிருந்து படையினர் கரையோரப் பகுதியை நோக்கி 50 கலிபர் தாக்குதல்களையும் மேற்கொண்டிருந்தனர். காலையில் பூநகரி, கல்முனை, மண்ணித்தலைப் பகுதியிலிருந்தும் பீரங்கித்தாக்குதல்கள், கலிபர்த் தாக்குதகள் மேற்கொள்ளப்பட்டன. (56)

# ஜேர்மன் நாஸிகள் போன்று சிங்களவர் அநீதி இழைக்கிறார்கள்

## - ஜேர்மன் மதகுரு கூறுகிறார்

(பொன்)

ஜேர்மனியில் நாஸிகள் யூத இனத்தவர்களுக்கு எதிராக இழைத்த கொடுமைகள் போன்றே, இலங்கையில் சிங்களவர் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்டுவருவதாக ஜேர்மன் கத்தோலிக்க மத குரு ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் சோல்ய்கன் நகரில் நடைபெற்ற' உலகத் தமிழர் இயக்க கல்விச்சேவையில்' கலந்துகொண்டு பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சிரித்தநாடு என்று கேள்விப்பட்டேன் ஆனால் இங்குள்ள அந்நாட்டவர்களின் முகங்களில் சிரிப்பை காணவில்லை. விரைவில் அந்நாட்டு பிரச்னை தீர்ந்து தமிழ் மக்களின் முகங்களில் சிரிப்பை காணவேண்டும் என்றார். (சி)

# சுவிஸ் பிரஜை பாதுகாப்பான சிறையில்

(கொழும்பு)

எக்கலையிலுள்ள ஒரு வீட்டில் ஒரு தொகை ஆயுதங்களுடன் பிடிபட்ட சுவிஸ் பிரஜையான அலன் கிறிஸ்ரின் நீர்கொழும்பிலுள்ள பலத்த பாதுகாப்பான சிறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

முன்னர் இவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பகுதியில் சுவிஸ் பிரெஞ்சு மொழிகளில் சூசகமாக எழுதப்பட்ட கடிதங்கள் சிறையதிகாரிகளிடம் சிக்கியதனை அடுத்து பாதுகாப்பான சிறைக்கு தற்போது மாற்றப்பட்டுள்ளார். (கே)

## 10 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பல்வேறு காரணங்களுக்சாக, விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம், தீவகப் பகுதி, கிளிநொச்சி, வலிகாமம் பகுதிகளைச் சேர்ந்த 10 பேர், நேற்று அவர்களின் பெற்றோரிடம் பத்திரிகையாளர்கள் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

(இது பற்றிய முழு விபரங்களையும் 2ம் பக்கத்தில் பார்க்கவும்.) (வி)

## பாப்பரசரின் சத்திர சிகிச்சை வெற்றி

(வத்திக்கான்)

ரோம்நகரில் வெம்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பரிசுத்த பாப்பரசர் 2வது அருளப்பர் சின்னப்பருக்கு நேற்று நடைபெற்ற சத்திரசிகிச்சைவெற்றியளித்ததாக வத்திக்கான் வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன. (மா)

## இந்திய உப ஜனாதிபதி தேர்தல்

(புதுடில்லி)

இந்திய துணை ஜனாதிபதி தெரிவிற்கான தேர்தல் அடுத்த மாதம் 19-ம் திகதி நடைபெறும் என தேர்தல் கமிஷன் நேற்று புதுடில்லியில் தெரிவித்துள்ளது.

இதுபற்றிய உத்தியோகபூர்வமான அறிவித்தல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் எனவும் இத்தேர்தலுக்கான வேட்பு மனுக்கல் தாக்கல் செய்யும் இறுதித்தினம் இம்மாதம் 31-ம் திகதி எனவும் தேர்தல் கமிஷன் மேலும் தெரிவித்துள்ளது. (க)

## இன்று

(புங்குடுதீவு)

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக வேலணை கல்விக் கோட்டம் நடாத்தும் விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை தொடக்கம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (101)

0 0

(யாழ்ப்பாணம்)

இன்று காலை 8-30 மணியளவில், சிறு நீர்ப்பாசனக் குளப் புனரமைப்புவேலை ள் வைபவ ரீதியாக ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்டத் தளபதி திரு. செல்வராஜா, யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு.இளம்பரிதி, யாழ். மாவட்டத் தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டு வைபவ ரீதியாக உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சிலம்பாய்க் குள வாய்க்கால் புனரமைப்பு வேலைகளை ஆரம்பித்துவைக்கவுள்ளனர்.

# இந்திரா சூனியக்காரி: கவிதை நூலுக்கு பரிசு

(புதுடில்லி)

முன்னாள் இந்தியப்பிரதமர் இந்திரா காந்தியை 'சூனியக்காரி' என்றும் அவரைச்சுட்டுக்கொன்ற பீம்சிங்கை புகழ்ந்தும் எழுதப்பட்ட கவிதையை உள்ளடக்கிய கவிதை தொகுதி நூலுக்கு கடந்த வருட இந்திய சாகித்திய பரிசு வழங்கப்பட்டுள்ளது.

இந்த கவிதை தொகுதி நூலை எழுதிய பிரபல பஞ்சாபிய கவிஞர் ஹரிந்தர்சிங் மஹபூப் என்பவருக்கு இந்தசாகித்திய பரிசு வழங்கப்பட்டுள்ளது. (கே)

# க. பொ. த. (உ/த) பரீட்சை வினாத்தாள்களை அனுப்புமாறு பணிப்பாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் கல்விப் பொதுத் தராதரப் [உயர் தரம்] பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள், காகிதாதிகள், வினாத்தாள்கள் ஆகியவற்றை உரிய காலத்திற்குள் யாழ். மாவட்டத்துக்கு அனுப்பிவைக்குமாறும்—

இல்லாதுபோனால் பரீட்சைக்குரிய ஏற்பாடுகளைக் கொழும்பில் யாழ். கல்விப் பணிப்பாளர் செய்யவேண்டுமென்று கருதினால் கூட்டுப் படைத் தலைமையகத்திடம் உத்தரவு பெற்று அனுப்பி வைக்குமாறும் யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம், பரீட்சை ஆணையாளர் திரு. ஆர்தர் வெதமுல்லவுக்கு அனுப்பி வைத்துள்ள தகவலில் தெரிவித்துள்ளார். [சு]

## யாழ் கடலேரியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஒருவருடைய சடலம் காவற்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டு நேற்று பிற்பகல் யாழ். வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தலையில் துப்பாக்கிச்சூடு ஏற்பட்டுள்ளதையும் காணக்கூடியதாகவுள்ளது. ஜட்டி பெனியனுடன் உடல்ஊதிப் பருத்த நிலையில் காணப்பட்ட இச்சடலம் அடையாளம் காணப்பட பிரேதஅறையில் வைக்கப்பட்டுள்ளது.

தீவுப்பகுதி கடற்பரப்பில் இராணுவத்தினர் துப்பாக்கிச் சூட்டிற்கு இவர் இலக்காகி இருக்கலாமென அஞ்சப்படுகிறது. (56)

## இனப்பிரச்னை

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

சனத்துடன் கையாண்டால் வெற்றி கிடைக்கும், இல்லையேல் முடிவில்லா யுத்தம் மேலும் நீண்ட காலம் நீடிக்கும் என்றும் அப்பத்திரிகை எச்சரித்துள்ளது. (சி)

## முல்லை, கிளிநொச்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியிலிருந்து வெளியேறி வருவதாகவும் செய்திகள்தெரிவிக்கின்றன. (56)

## திருமலையில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாகச் செயற்பட்டு வருவதுடன், பல தமிழரை மதம் மாற்றியும் உள்ளன.

இன விகிதாசாரப்படி சிங்களவர், முஸ்லிம்கள், தமிழர் என்றதொரு நிலையை ஏற்படுத்தவே இவ்வாறான தீவிர முயற்சிகள் நடைபெற்றுவருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி-மா)

## 3 தமிழ் பெண்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இங்குள்ள அகதி முகாமில் வசிக்கும் தமிழ் மக்களை முஸ்லீம்களாக மாறும்படி முஸ்லிம் கும்பல் வற்புறுத்தி வந்த பொழுதும் இங்குள்ள தமிழர் இவ்வற்புறுத்தலுக்கு அடிபணிய மறுக்கவே மூன்று தமிழ் பெண்களும் பலவந்தமாக முஸ்லிம் காடையரால் கடத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளையில் பச்சைநூர் கிராமத்தில் வாழும் 200க்கும் மேற்பட்ட தமிழர் வலுக்கட்டாயமாக முஸ்லிம்களாக மாற்றப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## புலிகள் விவகாரம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பினர் திரு. ஜஸ்வந்தர் சிங் தெரிவித்துள்ளார்,

லோக்சபாவில் நேற்றுநடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜஸ்வந்தர்சிங் மேற்கண்ட கருத்தை தெளிவாக வலியுறுத்திக் கூறினார்.

அரசின் இவ்வாறான போக்கால் காங்கிரஸின்செல்வாக்கு வீழ்ச்சியடைவதாகவும் கூறினார். (க)

## மண்டைதீவிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட இத் தாக்குதலினால் கரையோரப்பகுதியில் பதற்றம் நிலவியது.

இதேவேளையில் பீரங்கிப் படகிலிருந்து 50 கலிபர் தாக்குதலும் சரமாரியாக மேற்கொள்ளப்பட்டது. (க)

## மரண அறிவித்தல்

### தம்பு கோபாலசிங்கம்

(முன்னாள் பங்காளர் "ராஜ்கோபால் ரெக்ஸ்ரைல்ஸ்", யாழ்ப்பாணம்.)

யாழ்ப்பாணம், 383, நல்லூர் கோவில் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கொழும்பில் வசிப்பவருமான தம்பு கோபாலசிங்கம் 15-7-92ல் கொழும்பில் காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக்கணவரும், ஸ்ரீதரன், அமிர்தஸ்ரீ ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற குமாரசாமி, கணேசலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரனும், கனகசபாபதியின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கெங்காதரன், சுரேந்திரன்
(பெறுமக்கள்)

41, சங்கிலியன் வீதி,
நல்லூர். (சி 6544)

## தபால்களை ஒப்படைக்கவும்

(யாழ்ப்பாணம்)

குமணக்கப்பல் நாளை வெள்ளிக்கிழமை தபால்களை கொழும்புக்குக் கொண்டு செல்ல இருப்பதால் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணிவரை பொதுமக்கள் யாழ். தலைமை தபாலகத்தில் கடிதங்களை ஒப்படைக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது

நேற்று வழக்கத்துக்குமாறாக யாழ். தபாலகத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் நின்று தபால்களை ஒப்படைப்பதை காணக்கூடியதாக இருந்தது. (வி - 59)

## சிறில் ரணதுங்கவுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்தினம் பிரயாணம் செய்வதற்கு முன்னர் அனுமதி வழங்கப்பட்டிருந்த பின்பும் இறுதி நேரத்தில் எனது அனுமதி முப்படைத்தலைமைச் செயலகத்தால் மறுக்கப்பட்டுள்ளதென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலைகளை கொழும்பிலுள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லி ஆவன செய்வதற்கு இதுபோன்ற அனாவசியமற்ற தடைகள் பெரும் சிரமத்தை ஏற்படுத்தக் கூடியது என்று யாழ். அரசஅதிபர் நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார். (வி)

## மட்டுநகரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பஸ்ஸை நிறுத்தி துப்பாக்கி சூடுகளை பஸ்பயணிகள் மீது தீர்த்ததாகவும்கூறப்படுகிறது.

வழமையாக இப்பாதைகளில் பயணம் செய்யும் பயணிகள் வாகனத்திற்கு பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு வழங்குவது வழக்கம்.

படையினர் பாதுகாப்பு வழங்குவதற்கு முன்பாக மேற்படி மினிபஸ் பயணத்தை ஆரம்பித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு 2 கிலோ மீற்றர் தூரத்தில் பாதுகாப்புப் படையினரின் முகாம் இருப்பது குறிப்பிடத்தக்கது. (க-மா)

## ஆங்கில ஆசிரியர் தெரிவு

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் வகையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் வழங்கப்படவுள்ளது

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 20-ம், 21-ம் திகதிகளில் கோட்ட அலுவலகத்தில் நடைபெறும். (139)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office [Sri Lanka under Licence Number B/10336/8